MC.23/2024

10.03.2026

RW1 – விக்னேஷ்குமார் த/பெ.வள்ளுவன், வயது–36

மனுதாரர் ஆஜர்

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.03 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 12.30 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2026

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

திருமணம் முடிந்து எவ்வளவு நாட்கள் சந்தோஷமாக வாழ்ந்தீர்கள் என்றால் சந்தோஷமாக வாழவில்லை மூன்று மாதம் வாழ்ந்தோம். திருமணத்தின்போது பெண் வீட்டார் பெண்ணுக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்களுக்கு எவ்வளவு நகை திருமணத்தின்போது பெண் வீட்டார் போட்டார்கள் என்றால் 3 ¾ சவரண். நீங்கள் சொல்வது தவறு எனவும் உங்களுக்கு 3 ¾ சவரண் போடவில்லை 6 சவரண் நகை போட்டார்கள் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது மனுதாரருக்கு கொடுத்த சீர்வரிசை சாமாண்கள் உங்கள் வசம் தான் உள்ளதா என்றால் ஆமாம். உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் மனுதாரர் திருமணமான இரண்டாவது நாளே தனது தாயாருக்கு அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உங்களுடைய வீட்டில் இருக்க பிடிக்கவில்லை எனவும் விரைவில் விவாகரத்து பெற்றுக்கொண்டு வந்துவிடுவதாகவும் கூறினார் என்று பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் விவாகாரத்து கோரி மனு ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. நீங்கள் தான் விவாகாரத்து கோரி மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் திருமணம் முடிந்த ஒரு வாரத்தில் நடைபெற்றபோது மீண்டும் நான் மனுதாரருடன் தாம்பத்திய உறவுக்கு முயற்சித்த போது மனுதாரர் தன்னால்

தாம்பத்திய உறவில் ஈடுபட முடியாது என்றும் தனக்கு தாம்பத்திய உறவில் விருப்பம் இல்லை என்றும் மனுதாரருக்கு தாம்பத்தியத்தில் ஈடுபட முடியாது என சொல்லி மனுதாரர் தள்ளி வைத்து விட்டார் என்று மனுவிற்காக பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல அது உண்மை சங்கதி தான். 28.08.2022 அன்று மேட்டுப்பாளையம் மகளிர் காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். உங்களை காவல் நிலையத்தில் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள், உங்களை காவல் நிலையத்தில் சேர்ந்து வாழும்படி அறிவுறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். உங்களை அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் சேர்ந்து வாழ்ந்தால் வாழுங்கள் என்று சொன்னார்கள். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் BE படித்துள்ளேன். எங்கு பணிபுரிகிறீர்கள் என்றால் sharadha products என்ற தனியார் நிறுவனத்தில் எலக்ட்ரிகல் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். உங்களுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.22,300/-. உங்கள் மாத வருமானத்தை நிருபணம் செய்வதற்கு சம்பள சான்று தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொல்வது போன்று ரூ.22,300/- உங்கள் மாத வருமானம் இல்லை எனவும் பிரதி மாதம் ரூ.50,000/- வருமானம் ஈட்டி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் தாயார் என்ன பணி செய்கிறார் என்றால் கடந்த மே மாதம் தான் ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். உங்கள் தாயார் பட்டதாரி ஆசிரியர் என்றால் சரிதான். உங்கள் தாயார் ரூ.1,10000/- மாத வருமானம் பெற்று வந்தார் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் தாயாருக்கு பணி ஓய்வூதிய அனுகூலங்கள் ரூ.40,00,000/- லட்சத்திற்கும் கூடுதலாக கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் தகப்பனார் என்ன பணி செய்தார் என்றால் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து 2016-ல் ஓய்வு பெற்றார். உங்கள் தகப்பனார் எவ்வளவு

மாத ஊதியம் பெற்று வந்தார் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் தகப்பனார் ரூ.80,000/- மாத ஊதியமாக பெற்று வந்தார் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் தகப்பனார் மாதம் ரூ.50,000/- ஓய்வூதியம் பெற்று வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பொள்ளாச்சியில் உங்களுக்கு காலி மனைகள் உள்ளது என்றால் இல்லை. மேட்டுப்பாளையத்தில் நான்கு வீடுகள், ஐந்து கடைகள் கட்டி வாடைக்கு விட்டுள்ளீர்கள் என்றால் இல்லை. நீங்கள் சொல்லுவதைபோன்று மனுதாரருக்கு சொந்தமாக 10 ஏக்கர் மாந்தோப்பு உள்ளது எனவும் மேலும் 5 கடைகளை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.50,000/- வருமானம் பெற்றுவருகிறார் எனவும், மேலும் சொந்தமாக 4 வீடுகள் வைத்து அதை வாடகைக்கு விட்டு மாதம் ரூ.50,000/- வாடகை பெற்று சுகபோகங்களுடன் வாழ்ந்து வருகிறார் என்று மனுவிற்காக பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறீர்கள் என்பது தவறான சங்கதி எனவும் போதிய வருமானத்துடன் உங்கள் தாய், தந்தையர் ஓய்வூதியத்தை வைத்து நல்ல நிலையில் தான் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் தான் தன் பெற்றோர்களுடன் கஷ்ட ஜீவணம் செய்து வருகிறார் எனவும் மனுவில் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.